விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 320 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 18 வெள்ளிக்கிழமை (04.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல. 144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்
## இம்ரான் கான் மீது துப்பாக்கிச் சூடு



(இஸ்லாமபாத்)
பாகிஸ்தானின் வசிராபாத்தில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தலைமையில் நடத்தப்பட்ட அரசுக்கெதிரான பேரணியில் மேற்கொள் 11

## சிகரெட் விலை அதிகரிக்கலாம்

(கொழும்பு)
எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சிகரெட் விலையை, விலை சூத்திரத்திற்கு அமைய அதிகரிக்க முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரி 11

## எரிபொருள் விலையில் மாற்றம் இல்லை

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)
எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படாது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். 11

## கடன் தொல்லையால்
## யாழில் வர்த்தகர் உயிர்மாய்ப்பு

(கரணவாய்)
கடன் தொல்லை காரணமாக வர்த்தகர் ஒருவர் உயிரை மாய்த்த சம்பவம் யாழில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 37 வயதுடைய வர்த்தகரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 11

## எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள்
# பாராளுமன்றம் மூலம் நடைபெறவில்லை

### அதிருப்தியில் ஜனாதிபதி ரணில் சபாநாயகருக்கு கடிதம்



(கொழும்பு)
பாராளுமன்றம் வேகமாக செயற்படவில்லை, எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் பாராளுமன்றம் ஊடாக நடைபெறவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில்
## டெங்குக் காய்ச்சலால் குடும்பப் பெண் மரணம்

(கரணவாய்)
டெங்கு நோய்த் தொற்றுக் காரணமாக வடமராட்சியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயார் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அல்வாயைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான அன்னலிங்கம் அருந்தவச்செல்வி (வயது-63) என்பவரே உயிரிழந்தவராவார். 11

## அரசின் வரி விதிப்பு சரியா என நீதிபதிகள் நீதியரசர்களிடம் கேட்கின்றனர்

### விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வரிவிதிப்பு சரியா என நீதிபதிகள் நீதியரசர்களிடம் கேட்கும் நிலை உருவாகியுள்ளதாக நீதியரசர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித் தார்.

நேற்றையதினம் உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற 11

## இலங்கை மீண்டெழுவதற்கு
## 2023ம் ஆண்டு மார்ச்வரை காத்திருக்க வேண்டும்

### ஹிந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை மீண்டெழுவதற்கு 2023ஆம் ஆண்டு மார்ச் வரை காத்திருக்க வேண்டும் என ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத் திடம் இருந்து கடனைப் பெறுவதற் 12

## பயங்கரவாத சட்டத்தின் அண்மைய பயன்பாடு

### ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியீடு

(கொழும்பு)
பயங்கரவாத தடைச்சட்டத்தின் அண்மைய பயன்பாடு குறித்து கவலை வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம் தற்போதைய முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிப்பதற்காக இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நெருக்கடியின் பாதகமான தாக்கத் 11

## சீனி, மா, ரின்மீன், நெத்தலி, சிவப்புப் பருப்பு
## விலையைக் குறைத்தது லங்கா சதொச

(கொழும்பு)
லங்கா சதொச நிறுவனம் வெள்ளைச் சீனி, கோதுமை மா, ரின் மீன், நெத்தலி மற்றும் சிவப்புப் பருப்பு ஆகியவற்றின் விலைகளைக் குறைத்துள்ளது.

இன்று முதல் அனைத்து லங்கா சதொச சிறப்பங்காடிகளில் குறைக்கப்பட்ட விலையில் குறித்த பொருட்களை கொள்வனவு செய்யமுடியும் என லங்கா சதொச் தெரிவித்துள்ளது.

இதன்படி, வெள்ளைச் சீனி கிலோகிராம் ஒன்றின் விலை 22 ரூபாயினால் குறைக்கப்பட்டு, 238 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிலோகிராம்கோதுமை மாவின் புதிய விலை 279 ரூபாயாகும்.

மேலும், உள்ளூர் ரின் மீன் (செமன்) 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றம்...

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் நாட்டில் நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவித்துள்ளார். இந்த முன்மொழிவுகளில், தேசிய சபையை ஸ்தாபிக்கும் நடவடிக்கை மாத்திரமே இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நேற்று, சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ள எழுத்து மூல அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட யோசனைகளில் வங்கி விவகார மற்றும் நிதிச் சேவைகள் தொடர்பான குழு, பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குழு மற்றும் வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு ஆகியவற்றை வங்கி விவகாரங்கள் தொடர்பில் நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டாலும் அவை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி சபாநாயகருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்கவும், பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவவும் முன்மொழியப்பட்ட போதும் அவையும் செயற்படுத்தப்படவில்லை

இந்த பரிந்துரைகளின்படி 17 பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிக்க வேண்டியுள்ள போதிலும் அவற்றுக்கான தலைவர்கள் இது வரை நியமிக்கப்படவில்லை எனவும் அவற்றுக்கு நியமிக்கப்படும் இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல் இன்னும் தயாரிக்கப்பட வில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)


**சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்**

கனடா அவுஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளிற்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (Pvt) LTD** (C-5211)

**076 250 0098**

**அலுவலகத்திற்கு கட்டடம் தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றின் அலுவலகம் இயங்குவதற்கு வாடகைக்கு கட்டடம் தேவை.
கோண்டாவில் சந்தியில் இருந்து யாழ். நகர் செல்லும் பலாலி வீதி, கே.கே.எஸ் வீதி, பிறவுண் வீதி ஆகிய இடங்களுக்கு முன்னுரிமை

தொடர்பு **076 600 3303**


**விழிநீர் அஞ்சலி**



எமது சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் Dr.N.J.Q.**தர்சனோதயன்** அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி **நிற்றம்மா நித்தியானந்தன்**

மலர்வு 1949.10.24 — உதிர்வு 2022.10.30

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13343)

பிரிவால் துயருறும் அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் – இலங்கை


**காணி விற்பனைக்கு**

பழைய வாய்க்கால் வீதி மிருசுவிலில்
A9 வீதியிலிருந்து600m உள்ளே
36 பரப்பு (18 பரப்புக்களாக இரண்டு துண்டு )
காணி விற்பனைக்கு உண்டு

Whatsapp **+94 76 202 1675** (க)

☎ **-076 623 2961**

**கார்/ வான் வாடகைக்கு உண்டு**

கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும். (13345)

**077 898 9691**

**RSP Rent a Car**


**VACANCY**

**UNIVERSITY OF JAFFNA SRI LANKA**

University of Jaffna will entertain applications from qualified persons for the under-mentioned post up to **Thursday, 14.11.2022.**

**Post of Temporary Scientific Assistants**
**"Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"**

**Salary scale:** Rs.48, 385 / - (fixed) pm

**Qualifications:-**
Para-Medical or Science Based Qualified Graduates from the following categories:

I

A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.

II

A Second Class (Lower Division) in a Special Degree Examination in the relevant field.

III

An ordinary pass in the B.Sc. Special Degree Examination in the relevant field.

IV

An ordinary pass in the B.Sc. General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

**Note:** Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format. Applications with scanned copies of all the documents should be sent on or before Thursday, 14.11.2022 to the following email address: fomvacancy@univ.jfn.ac.lk. *(Application form is available in the Faculty of Medicine website: https://www.med.jfn.ac.lk/)*

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No):


970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview. The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

**Registrar**
**University of Jaffna** (C-5209) 03.11.2022

**கண்ணீர் அஞ்சலி**



பதிவாளர் நாயகம் திணைக்கள வடக்கு வலய அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் செல்வி **தர்சிகா செல்லத்துரை** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

**வேலன் செல்லத்துரை**

அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நலன்புரிக் கழகம்
பதிவாளர் நாயகம் திணைக்களம் வடக்கு வலயம் மற்றும் காணிப்பதிவகம், யாழ்ப்பாணம்.

(13340)

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

**வெளிவாரிப் பரீட்சைகள்**
**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி**

- இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020
- மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி **25.11.2022 (வெள்ளிக்கிழமை)** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

பிரதிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
03.11.2022 (C-5208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசம் உடனடியாக தலையிட்டு காணி அபகரிப்பை தடுக்க வேண்டும்

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

(அராலி)

**சிங்கள அரச பேரினவாதம் நீதிமன்றங்களின் உத்தரவுகளை மீறி மேலிடத்தில் வந்த உத்தரவு என்று சொல்லிக்கொண்டு அடாத்தாக காணிகளை பிடிப்பதை நாங்கள் இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது என சிவகுரு ஆதீனத்தின் முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.**

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வலி. வடக்கு காணி அபகரிப்புக்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திலே எங்களுடைய காணிகள் , நிலங்கள் அபகரிக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் கடந்த 74 வருடங்களாக நடைபெற்று வருகின்றன. இதற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

குறிப்பாக இன்று வலி. வடக்கிலே 2500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கின்றன.

எங்களுடைய மக்கள் தாங்கள் வாழ்வதற்கு இடம் இல்லாமல் துன்பப்பட்டுக் கொண்டு விவசாயம் செய்வதற்கு, பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, கடல் வளங்களை பெற்றுக் கொள்வதற்கு வழி இல்லாமல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய எங்களது பூமியிலே வந்து சிங்கள, பௌத்த, அரச பேரினவாத அதாவது அரச இயந்திரம் இங்கு அடாவடியாக நீதிமன்றங்களின் உத்தரவுகளை மீறி மேலிடத்தில் வந்த உத்தரவு என்று சொல்லிக் கொண்டு அடாத்தாக காணிகளை பிடிப்பதை நாங்கள் இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

இந்தியா உட்பட அனைத்து சர்வதேசமும் இதிலே தலையிட்டு உடனடியாக காணி அபகரிப்புக்களை, வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தை கூறுபோடுகின்ற முயற்சியை நிறுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தயகத்திலே சுயநிர்ணய அடிப்படையில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பினை நடத்தப்படுவதன் ஊடாக அரசியல் தலை விதியினை நாங்களே தீர்மானிக்கின்றோம். இது தான் எங்களுடைய பிரதானமான வேண்டுகோளாக இருக்கின்றது என தெரிவித்தார். (4-104)



நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினரால் தமிழ் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்கள் மத்தியில் பரப்பும் வேலைத்திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# பாணில் கரித்துண்டு

(அராலி)

யாழ்ப்பாணம் மருதனார் மடம் பகுதியில் உள்ள வெதுப்பக உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கடையில் பாணில் கரித்துண்டு சேர்த்து வேக வைக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, குறித்த வெதுப்பக உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கடையில் காலை வேளை பாண் வாங்கியவர் வீடு சென்று அதனை வெட்ட முற்பட்ட நிலையில் பாணுடன் கரித்துண்டு சேர்ந்திருந்தமை இனங்காணப்பட்டது.

பாணின் வெளிப்புறத்தில் குறித்த கரித்துண்டு காணப்பட்ட நிலையில் உட்புறம் இருந்திருந்தால் உணவுடன் உட்சென்றிருக்கும். இவ்வாறே அச்சுவேலிப் பகுதியில் உள்ள வெதுப்பக நிலையத்தில் வாங்கிய பாணில் குண்டூசி இருந்தமை அண்மையில் கண்டறியப்பட்டது. (4-104)



# அனுமதிப்பத்திரம் இன்றி

## மாடு கடத்தியவருக்கு அபராதம்

(அராலி)

காரைநகரில் இருந்து அனுமதிப்பத்திரம் இல்லாமல், முறையற்ற விதத்தில் கொண்டு வந்த மூன்று மாடுகள் பொன்னாலை சந்தியில் கடமையில் இருந்த கடற்படையினரால் கடந்த 31 ஆம் திகதி மீட்கப்பட்டன. இதன்போது மூளாய் பகுதியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து மாடுகளை சட்டவிரோதமாக கொண்டு சென்றவரது மனைவி அவ்விடத்திற்குச் சென்று "தான் கிராம உத்தியோகத்தர்" என தெரிவித்து கடற்படையினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீட்கப்பட்ட மூன்று மாடுகளுடன் வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.

பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். சட்டவிரோதமாக மாடுகளை கொண்டு சென்ற குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டம் விதிக்கப்பட்டது. (4-104)

# கூடாரம் இன்மையால்

## செங்குந்தா பொதுச்சந்தையில் மீன்வெட்டுனர்கள் பாதிப்பு



(அராலி)

நல்லூர் கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தை மீன் வெட்டுனர்கள், பருவமழை காலத்தில் கூடாரம் இல்லாத காரணத்தால் மழையில் நனைந்து தொழிலில் ஈடுபடுவதாகவும் இது குறித்து கடந்த வருடத்திலிருந்து மாநகர சபை அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நிரந்தர தகரசீற் கூடாரத்தை உடனடியாக அமைத்து தர வேண்டும் அல்லது மாற்று இடத்தை தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயங்களை யாழ். மாநகர அதிகாரிகள் கவனத்தில் எடுத்து சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்துரையாடி தீர்வினைப்பெற்று தர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-104)




ஈழத்து சினிமா கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வான "குவியம் விருதுகள்" வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன், கஜிநதன்)

# புத்தூர் பொது நூலகத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொதுநூலகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மண்டபத்தில் புத்தூர் பிரிவிற்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு "முன்பள்ளி சிறார்களை வாசிக்கத் தூண்டுவது எப்படி?" எனும் தொனிப்பொருளில் ஒரு விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கு சி.கனேசலிங்கம் (முன்பள்ளி அபிவிருத்திப்பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்) தலைமையில் இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் உரியவர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி வெற்றி



இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் இந்திய அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் இந்திய அணி, பங்களாதேஷ் அணியை எதிர் கொண்டது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பை தெரிவு செய்ய இந்திய அணி துடுப்பெடுத்தாடியது.

அதன்படி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 6 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனை தொடர்ந்து 185 என்ற வெற்றி இலக்கை நோக்கி பங்களாதேஷ் அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய போது மழை குறுக்கிட்டதால் 16 ஓவர்களாக போட்டி மட்டுப்படுத்தப்பட்டது.

அதன்படி 151 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற அடிப்படையில் மீண்டும் களமிறங்கிய பங்களாதேஷ் அணி அனைத்து ஓவர்கள் நிறைவில் 145 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதனால் 5 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிபெற்று குழு இரண்டில் 6 புள்ளிகளுடன் முதலாவது இடத்தை பிடித்துள்ளது. (4)

# முதல்வர் கிண்ண
## சதுரங்க சுற்றுப்போட்டி

யாழ். மாநகர சபையால் முதல்வர் கிண்ண சதுரங்க சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளதாக மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது, எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சதுரங்க சுற்றுப்போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீர வீராங்கனைகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் யாழ். மரநகர சபையால் கோரப்பட்டுள்ளது.

போட்டிகள் அனைத்தும் 5 முதல் 6 வயதிற்குட்பட்டவர்கள், 7 முதல் 8 வயதிற்குட்பட்டவர்கள், 9 முதல் 10 வயதிற்குட்பட்டவர்கள், 11 முதல் 12 வயதிற்குட்பட்டவர்கள், 13 முதல்- 14 வயதிற்குட்பட்டவர்கள், 15 முதல் 16 வயதிற்குட்பட்டவர்கள், 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் என ஆண், பெண் இரு பாலருக்கும் தனித்தனிப் பிரிவுகளாக நடைபெறும்.

யாழ்.மாவட்ட ரீதியில் நடைபெறும் இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் பாடசாலை ரீதியாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியாகவோ விண்ணப்பிக்க முடியும்.

யாழ். மாநகரசபையின் செயலாளர் பகுதி , யாழ். மாநகர சபை பொது நூலகம், நல்லூர், வண்ணார் பண்ணை மற்றும் குரு நகர் ஆகிய இடங்களில் உள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான நூலகங்களில் விண்ணப்பத்தினை பெற்று பூரணப்படுத்தி நுழைவுக்கட்டணமாக 500 ரூபாவை செலுத்தி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களை 021-222 1186, 077-063 5012 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-104)



முல்லைத்தீவு மாவட்ட குத்துச் சண்டை அணியினரை ஊக்குவித்து மென்மேலும் தயார்படுத்தும் முகமாக மாவட்ட குத்துச் சண்டை அணியினருக்குச்சீருடைகள்நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-சதீஸ்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2723

குறிஞ்சிநிலா




நிதுன்





சாஹித்யா




மாறன்




நிருஜா




நந்திதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலுக்காக சுற்றுலா விசாக்களுடன் வெளிநாடு செல்ல வேண்டாம்

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

(கொழும்பு)

சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு சுற்றுலா விசா மூலம் சென்றவர்களில் சிலர் தொழிலின்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாக அந்தப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார். எனவே, சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள நபர்களை பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை 9.1 வீதத்தினால் குறைவடைந்தது

(கொழும்பு)

இலங்கையில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை 9.1 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் புகைப்பிடிப்பவர்களில் 51 சதவீதமானவர்கள் அதிலிருந்து விலகுவார்கள் என தாம் நம்புவதாக அந்த சபையின் தலைவர் மருத்துவர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வர்த்தக நிலையங்களில் சிகரெட் சில்லறை விலைக்கு உள்ளதே அவர்களுக்கு அதிலிருந்து விடுபட தடையாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)


# மணிவிழா வாழ்த்து

Best Wishes



## செல்வி. கிருபாகுமாரி கந்தையா

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 30 வருடங்களாக சிறப்பாகப் பணியாற்றி நாளைய தினம் தனது 60 வது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் எமது பிரதம நூலகர் செல்வி. கிருபாகுமாரி கந்தையா அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் தனது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் உள உடல் ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
யாழ்.பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச்சங்கம்

(13338)


## வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## 2022ம் ஆண்டிற்கான
## கிளைக்குழுத் தெரிவிற்கான அறிவித்தல்

காலம் 2022.11.06 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி

| இல | கிளையின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கிளைக்குழுத் தெரிவு நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | மணற்காடு | 178 | குலேந்திரராஜா வேணு கோபி | பொதுநோக்கு மண்டபம் மணற்காடு |
| 02 | குடத்தனை | 180 | அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | பொதுநோக்கு மண்டபம் குடத்தனை |
| 03 | அம்பன் | 177 | சண்முகநாதன் ரதிகுலன் | அன்னமார் கோவிலடி அம்பன் |
| 04 | மாமுனை | 181 | சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | பொதுநோக்கு மண்டபம் மாமுனை |
| 05 | செம்பியன்பற்று | 182 | வீரசிங்கம் இரத்தினகாந்தன் | பொதுநோக்கு மண்டபம் செம்பியன்பற்று |
| 06 | மருதங்கேணி | 183 | சண்முகநாதன் பாலகுமார் | தலைமைக் காரியாலயம் மருதங்கேணி |
| 07 | உடுத்துறை | 184 | சற்குணநேசன் முகுந்தவேள் | உடுத்துறை கிளைக் கட்டிடம் உடுத்துறை |
| 08 | நித்தியடுவட்டை | 187 | அரியரத்தினம் வசீகரன் | நித்தியடுவட்டை முன்பள்ளி |
| 09 | கேவில் | 185 | தங்கராசா கண்ணதாசன் | பொதுநோக்கு மண்டபம் கேவில் |

குறித்த கிளைகளிற்கான அறிவித்தல் கடிதம் குறித்த தவிசாளரினால் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் கிடைக்கப் பெறாதவர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு கிளைக்குழுத் தெரிவுகளில் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்கமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு சேவையிலுள்ள செயலாளர் (சி-5207)

# இராசிபலன்

04.11.2022
ஐப்பசி 18, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 7.42 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 2.04 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை

உத்தான ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்
மகம்

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.





மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்.





செய்தொழில் மேன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.




செய்தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், வழிபாடு மகத்துவம் தரும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.




நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.




உடன் பிறப்புக்கள் அனுசரனையாக நடந்து கொள்வர், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்




உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

பிறருக்கு உதவி செய்வதே வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 19





'தங்கச்சியைப் பற்றி மாறவேள் பல தடவை சொன்னதில் ஏதேதோ கற்பனை செய்து கொண்டிருந்தான் வந்தியத்தேவன். இப்போது ஒருவாறு ஏமாற்றமே அடைந்தான். அந்தப் பெண்களின் கூட்டத்தில் பழுவேட்டரையருடன் பல்லக்கில் வந்த மாது யாராக இருக்கலாம் என்பதை அறிய வந்தியத்தேவனுடைய கண்கள் தேடி அலைந்தன.

**ஐந்தாம் அத்தியாயம் குரவைக் கூத்து**

அந்தப்புரத்திலிருந்து நண்பர்கள் இருவரும் வெளியே வந்தார்கள். உள்ளேயிருந்து, ஒரு பெண் குரல், "கந்தமாறா! கந்தமாறா!" என்று அழைத்தது. "அம்மா என்னைக் கூப்பிடுகிறாள், இங்கேயே சற்று இரு! இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கந்தமாறன் உள்ளே போனான்.

பெண்களின் குரல்கள் பல சேர்ந்தாற் போல் அடுத்தடுத்துக் கேள்விகள் கேட்டதும், கந்தமாறன் தட்டுத்தடுமாறி மறுமொழி கூறியதும் வந்தியத்தேவன் காதில் விழுந்தது. பின்னர் அந்தப் பெண்கள் கலகலவென்று சிரித்த ஒலியும் உள்ளேயிருந்து வந்தது.

தன்னைப் பற்றித் தான் அவ்விதம் அவர்கள் கேலி செய்து சிரிக்கிறார்களோ என்ற எண்ணம் வந்தியத்தேவனுக்கு வெட்கத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது. கந்தமாறன் வெளியே வந்ததும் வந்தியத்தேவனின் கையைப் பிடித்துக் கொண்டு "வா! எங்கள் மாளிகையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்!" என்று சொல்லி இழுத்துக் கொண்டு போனான்.

கடம்பூர் மாளிகையின் நிலா முற்றங்கள், ஆடல் பாடல் அரங்கங்கள், பண்டக சாலைகள், பளிங்கு மண்டபங்கள், மாட கோபுரங்கள், ஸ்தூபி கலசங்கள், குதிரை லாயங்கள் ஆகியவற்றை வந்தியத்தேவனுக்குக் கந்தமாறன் காட்டிக் கொண்டு சென்றான்.

இடையில் வந்தியத்தேவன், "கந்தமாறா! என்னை அந்தப்புர வாசலில் நிறுத்தி நீ மறுபடியும் உள்ளே போன போது அந்தப்புரத்தில் ஒரே சிரிப்பும் குதூகலமுமாயிருந்ததே, என்ன விசேஷம்? உன்னுடைய சிநேகிதனைப் பார்த்ததில் அவர்களுக்கு அவ்வளவு சந்தோஷமா?" என்று கேட்டான்.

"உன்னைப் பார்த்ததில் அவர்களுக்கெல்லாம் சந்தோஷந்தான். உன்னை அம்மாவுக்கும் மற்றவர்களுக்கும் பிடித்திருக்கிறதாம். ஆனால் உன்னைக் குறித்து அவர்கள் சிரிக்கவில்லை.." "பின்னே எதற்காகச் சிரித்தார்களாம்?"

"பழுவேட்டரையர் இருக்கிறார் அல்லவா? இத்தனை வயதுக்குப் பிறகு அவர் புதிதாக ஒரு இளம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார். மூடு பல்லக்கில் வைத்து அவளை இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால் அந்தப்புரத்துக்கு அவளை அனுப்பாமல், அவருடைய விடுதியிலேயே அடைத்துப் பூட்டி வைத்திருக்கிறாராம்! அந்தப் பெண்ணைப் பல்கணி வழியாக எட்டிப் பார்த்து விட்டு வந்த ஒரு தாதிப் பெண் அவள் அழகை வர்ணித்தாளாம். அதைக் குறித்துத்தான் சிரிப்பு!

அவள் சிங்களப் பெண்ணோ கலிங்கத்துப் பெண்ணோ, அல்லது சேர நாட்டுப் பெண்ணோ என்று சர்ச்சை செய்கிறார்கள்! பழுவேட்டரையரின் முன்னோர்கள் சேர நாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்கள் என்று உனக்குத் தெரியும் அல்லவா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன் ஏன், நீ தான் முன்னொரு தடவை சொல்லியிருக்கிறாய். இருக்கட்டும், கந்தமாறா! பழுவேட்டரையர் இந்த மர்ம சுந்தரியான மங்கையை மணந்து எத்தனை காலம் ஆகிறது?"

"இரண்டு ஆண்டுக்குள்ளே தான் இருக்கும்; மணம் செய்து கொண்டதிலிருந்து அவளைத் தனியாகச் சிறிது நேரம் கூட அவர் விட்டு வைப்பதில்லையாம்! எங்கே போனாலும் கூடப் பல்லக்கில் ஆசை நாயகியையும் அழைத்துப் போகிறார். இதைக் குறித்து நாடெங்கும் கொஞ்சம் பரிகாசப் பேச்சு நடந்து வருகிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## அழகா ? அறிவா?

(நேற்றைய தொடர்ச்சி)

எனக்கு வாழ வழி இல்லை. எனவே எனக்கு ஏதாவது ஒரு வேலை போட்டுக் கொடுங்கள் என்று கேட்டான்.

இதைக் கேட்டு விட்ட மன்னன் அனந்தனருகே வந்து "நீ எந்த நாட்டைச் சேர்ந்தவன்?" என்று கோபத்தோடு கேட்டான்.

அனந்தனும் "இந்த வைர மங்கல சமஸ்தானத்தைச் சேர்ந்தவன்தான்" என்றான்.

மன்னனோ "இந்த நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தால் இந்த நாட்டின் மன்னன் யார் என்று கண்டு கொள்ள முடியவில்லையா? இந்த நாட்டின் மன்னன் நான். நீ தவறாக என் தோட்டக்காரனை மன்னன் என்று எண்ணி விட்டாய்" என்றான்.

உடனே அனந்தன் பணிவுடன் மன்னனை வணங்கி "அரசே! என்னை மன்னியுங்கள் நான் இன்றுவரை தங்களைப் பார்த்தது கிடையாது.

அதனால் தான் இந்தத் தவறு நடந்து விட்டது. தங்கள் தலையில் மகுடம் இல்லை. உடலில் விலையுயர்ந்த ஆபரணங்கள் இல்லை.

அதனால் தான் [illegible] களை மன்னர் என்று நினைக்க முடியாமல் போய்விட்டது. உயரமாயும் பருமனாயும் வலுவான உடலும் முறுக்கி விடப்பட்ட மீசையும் உள்ள இந்தத் தோட்டக்காரனைக் கண்டு ஏனோ இவன் தான் மன்னன் என எண்ணி விட்டேன்" என்றான்.

அப்பொது மன்னனுக்கு, தான் மந்திரிப் பதவிக்கான தகுதிகளில் அழகையும் கம்பீரத் தோற்றத்தையும் சேர்த்தது நினைவிற்கு வந்தது.

பொறுப்பான மந்திரிக்குக் கூரிய அறிவு தான் முக்கியம். அழகு தேவையில்லை என்பதை அப்போது உணர்ந்தான்.

அவன் "சிரித்தவாறே அனந்தனிடம் "மந்திரிப் பதவிக்கான என் அறிவிப்பில் இருக்கும் தவறை எவ்வளவு நாசுக்காகச் சொல்லிக் காட்டி விட்டாய்!

உன் போன்றவனுக்கு சாதாரண வேலையா கொடுப்பது? இப்போது மகுடம் ஆபரணம், பகட்டான ஆடை இவையெல்லாம் இல்லாத என்னைப் பார்த்தாலும் நாளை தர்பாரில் இவற்றோடு நான் இருக்கும் போது என்னை வந்து பார்.

அழகு கம்பீரத் தோற்றம் என்று அறிவிக்கப்பட்ட தகுதிகளை நான் இப்போதே நீக்கி விட்டேன்.

எனவே நாளைய பரீட்சையில் நீ கலந்து கொண்டு இப்பதவியை அடையலாம்" என்றான்.

மறுநாள் அனந்தன் மன்னன் கூறியபடி பரீட்சையில் கலந்து கொண்டு வெற்றி பெற்று மந்திரிப் பதவியை அடைந்தான். அவன் நீண்டகாலம் அப்பதவியை வகித்து திறமை மிக்க மந்திரி என்ற பெயரும் பெற்று விட்டான்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 115

### முதல் குத்து

"ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு லெனின்கிராட் தெரு எனக்கு ஒரு விதியைக் கற்றுக் கொடுத்தது. ஒரு சண்டை தவிர்க்க முடியாதது என்றால், முதல் குத்து உங்களுடையதாக இருக்க வேண்டும்," என்று புடின் 2015 ஒக்டோபரில் கூறினார்.

செச்சினியாவில் பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தனது இராணுவத் தாக்குதலை நியாயப்படுத்தும்போது, "கழிவறையில் இருந்தால் கூட அவர்களை அழிப்பேன்" என்று தெரு சண்டைக்காரர்களின் மொழியை அவர் பயன்படுத்தினார்.

முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் இந்தக்குடியரசு, 1999 முதல் 2000 வரை நடந்த கடுமையான சண்டைகளால் அழிக்கப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் இறந்தனர்.

2008 ஆம் ஆண்டில், புடினின் ரஷ்யப் படை ஜோர்ஜிய இராணுவத்தை முறியடித்து, பிரிந்து சென்ற இரண்டு பகுதிகளான அப்காசியா மற்றும் தெற்கு ஒசேஷியாவை கைப்பற்றியது.

இது ஜோர்ஜியாவின் அப்போதைய நேட்டோ சார்பு ஜனாதிபதி மிகைல் சாகாஷ்விலியுடன் மிகவும் தனிப்பட்ட மோதலாக இருந்தது.

முன்னாள் சோவியத் நாடுகளில் உள்ள மேற்கத்தேய சார்பு தலைவர்களின் முக்கியத்துவத்தை குறைப்பதற்கான புடினின் தயார் நிலையை இது காட்டியது.

### போரில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள்

அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் உக்ரைனுக்கு அதிநவீன ஆயுதங்களை வழங்கியிருக்கின்றன. ரஷ்யாவின் தாக்குதல்களை உக்ரைன் தாக்குப் பிடிப்பதற்கு மேற்கத்தேய நாடுகள் வழங்கிய நவீன போர் ஆயுதங்கள் தான் காரணம் என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள்.

ரஷ்யப் படைகளைச் சமாளிக்க உக்ரைன் பயன்படுத்தும் ஆயுதங்கள் என்னென்ன என்பதை இங்கே பார்க்கலாம்.

ரஷ்ய இராணுவத்திடம் இருக்கும் அதேவகையிலான சோவியத் காலத்தில் கட்டமைக்கப்பட்ட பல ரொக்கெட் லாஞ்சர்கள், பீரங்கிகள் ஆகியவை உக்ரைனிடம் உள்ளன. ஆனால் இவை ரஷ்யாவிடம் இருக்கும் அளவிற்கு துல்லியமானவை அல்ல.

உக்ரைனுக்குள் ஊடுருவிய ரஷ்யப் பீரங்கிப் படையினரை சிதறடிக்க அமெரிக்கா வழங்கிய ஜாவ்லின் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையே உக்ரைனின் படைப்பலமாக இருக்கிறது. தோளில் தூக்கிச் சென்று இயக்கும் வகையிலான இந்த ஏவுகணைகள் உக்ரைனுக்கு கூடுதல் பலத்தை வழங்கியுள்ளன.

தரையிலிருந்து சென்று தரையைத் தாக்கும் ஸ்டிங்கர் வகை ஏவுகணைகள் ரஷ்யப் படையினரை சமாளிக்க உக்ரைனுக்கு கை கொடுத்திருக்கின்றன. இதனையும் தோளில் சுமந்து சென்று இயக்க முடியும்.

ஏபிசி எனப்படும் கவச வாகனங்கள் ரஷ்யப் பீரங்கிப் படையினரை எதிர்த்துப் போரிட உக்ரைன் வீரர்களுக்கு உதவியாக இருக்கின்றன.

இந்தப் போருக்கு முன்பாக உக்ரைனுக்கு துருக்கி வழங்கியிருந்த பைரக்டர் TB2 டிரோன்கள் நகருக்குள் நுழையும் ரஷ்யப்படைகளை துல்லியமாக தாக்க பெரிதும் உதவியாக இருக்கின்றன.

எஸ் 300 எனப்படும் வான் பாதுகாப்பு அமைப்பு ரஷ்யாவின் வான்வழித் தாக்குதலை தடுத்து நிறுத்த உக்ரைனுக்கு கைகொடுத்திருக்கிறது. இவ் ஆயுதங்கள் பற்றி விரிவாக கீழே தரப்படுகிறது.

### ஜாவ்லின் ஏவுகணைகள்

சக்திவாய்ந்த பீரங்கிகளை எதிர்த்துப் போரிட உதவுகின்றன ஜாவ்லின் ஏவுகணைகள். ரஷ்யாவின் பெரும்பாலான பீரங்கிகளை அழித்தது ஜாவ்லின் ஏவுகணைகள்தான் என்கின்றன சர்வதேச ஊடகங்கள். 2,000 இற்கும் அதிகமான ஜாவ்லின் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஜாவ்லின் ஏவுகணைகளின் தாக்குதலில் பெரும்பாலான ரஷ்ய பீரங்கிகள் அழிந்துவிட்டதால், சில இடங்களிலிருந்து ரஷ்யா தனது பீரங்கிப் படைகளைப் பின் வாங்கியிருப்பதாகவும் செய்திகள் கூறப்படுகின்றன. ஒன்றின் விலை கிட்டத்தட்ட US$216,717 ஆகும்.

(தொடரும்)

# கை நழுவிய கைத்தொலைபேசிக்காக 40 அடி உயரத்தில் இருந்து தவறி விழுந்த இளம்பெண்

## 18 நாட்களின்பின் உயிரிழப்பு



(அங்காரா)

மேற்கு துருக்கியில் 15 வயது சிறுமி ஒருவர் செல்பி எடுத்து கொண்டிருந்த போது கைநழுவிய செல்போனை பிடிக்க முயன்று மாடியில் இருந்து தவறி விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

துருக்கியின் முகலா மாகாணத்தில் உள்ள ஒர்டகா நகரில் மெலிக் கன் கனவுஸ்லர் (வயது-15) என்ற சிறுமி மாடியில் நின்று செல்பி எடுத்து கொண்டிருந்தார்.

அப்போது தனது கையில் இருந்து நழுவிய செல்போனை பிடிக்க முயன்று தனது சமநிலையை இழந்த மெலிக் கன் கனவுஸ்லர் 40 அடி உயரத்தில் இருந்து தரையில் பயங்கரமாக மோதி விழுந்துள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மருத்துவ உதவிக் குழு மற்றும் பொலிஸார் போதிய முதலுதவி சிகிச்சை அளித்தனர். விபத்தின் தாக்கம் பலமாக இருந்ததால் முகலா நகரில் உள்ள மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் உயிருக்கு போராடி வந்த மெலிக் கன் கனவுஸ்லர் 18 நாட்களுக்கு பிறகு உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மெலிக்கின், வீதியில் நின்று கொண்டிருக்கும் மனிதரின் அருகில் 40 அடி உயரத்தில் இருந்து தவறி விழும் காட்சிகள் நான்கு மாடிக் கட்டிடத்தை சுற்றியுள்ள சி.சி.டி.வியில் பதிவாகியுள்ளன. (நி)

# இஸ்ரேல் பிரதமர் ஆகிறார் பெஞ்சமின் நேதன்யாகு



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பாராளுமன்றத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளதன் மூலம், அந்நாட்டின் அடுத்த பிரதமராக, மீண்டும், பெஞ்சமின் நேதன்யாகு பதவி ஏற்கவுள்ளார்.

மத்திய கிழக்கு நாடான இஸ்ரேலில், நீண்ட காலம் பிரதமரா்க இருந்தவர் பெஞ்சமின் நேதன்யாகு. கடைசியாக கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி மூலம் நேதன்யாகு பிரதமரானார்.

ஆனால், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை இழந்ததால் நேதன்யாகு கடந்த ஆண்டு ஜூன் மாதம் இஸ்ரேல் பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.

இதனை தொடர்ந்து நடந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், யாமினா கட்சியின் தலைவரான நப்தாலி பென்னட் சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சி அமைத்தார். இஸ்ரேல் பிரதமராக நப்தாலி பென்னட் தலைமையிலான அரசு சுமார் ஓராண்டு காலம் ஆட்சி செய்த நிலையில், கடந்த ஜூன் மாதம் அவரது அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை கூட்டணி கட்சிகள் திரும்பப் பெற்றன.

இதனால் அந்த நாட்டின் பாராளுமன்றம் மீண்டும் கலைக்கப்பட்டு தேர்தலுக்கு தயாரானது. நவம்பர் மாதம் தேர்தல் நடக்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில் இடைக்கால பிரதமராக யாயிர் லாபிட் நியமிக்கப்பட்டார்.

அவற்றில், 65 தொகுதிகளில் நேதன்யாகுவின் லிகுட் கட்சிக்கு வெற்றி உறுதியாகி உள்ளது. இதன் மூலம் பெரும்பான்மை பலத்துடன் இஸ்ரேலின் புதிய பிரதமராக பெஞ்சமின் நேதன்யாகு மீண்டும் பதவி ஏற்க உள்ளார். (நி)

# வடகொரியா மீது தடைகளை அமுல்படுத்த அமெரிக்கா வலியுறுத்து

(பியாங்யாங்)

வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஒன்றை ஏவியதையடுத்து வட கொரியா மீது தடைகளை அமுல்படுத்துமாறு அனைத்து நாடுகளையும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

வடகொரியா நேற்று முன்தினம் 23 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்திய நிலையில், நேற்று வியாழக்கிழமை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை உட்பட 3 ஏவுகணைகளை வடகொரியா ஏவியுள்ளதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

வட கொரியாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைக்கு அமெரிக்கா, தென் கொரியா முதலான நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிற்றமோல் மருந்திற்கு பாரிய தட்டுப்பாடு

(கொழும்பு)

**நாட்டில் உள்ள சில மருத்துவமனைகளில் பரசிற்றமோல் மருந்துக்கு கூட கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே இவ்வாறு தெரிவித்தார்.

பொதுவாக இந்நாட்டில் நோயாளிகளின் சிகிச்சைக்காக 1300 இற்கும் மேற்பட்ட வகையான மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவற்றில் 383 வகையான மருந்துகள் அத்தியாவசிய மருந்துகளாகக் கருதப்படுகின்றன.

எனினும் நாட்டில் தற்போது சுமார் 160 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## பிரதேச சபை சாவகச்சேரி தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2023

1. சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு பாதுகாப்புச் சேவையினை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி -2022.11.08 - 2022.11.22 பிற்பகல் 15.00 மணிவரை**
   **கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 2022.11.23 பி.ப 14.00 மணிவரை**
   **கேள்வி திறக்கும் திகதி - 2022.11.23 பி.ப 14.30 மணி**
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்க வேண்டும்.
4. கேள்விதாரரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளை அலுவலகம் வடமாகாணத்தில் அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 1000.00 இனையும் மீளளிக்ககூடிய வைப்புப்பணமாக ரூபா 10000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியினை **தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் எழுதி அனுப்புதல் வேண்டும். இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிர்திநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்கள் அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 01 | சாவகச்சேரி பிரதேச சபை (தலைமை அலுவலகம்) கொடிகாமம் | 01 | 01 | 01.01.2023 - 31.12.2023 |
| 02 | பொதுச்சந்தை கொடிகாமம் | 01 | 01 | 01.01.2023 - 31.12.2023 |

**தலைவர், பெறுகைக்குழு,**
**பிரதேச சபை, சாவகச்சேரி**
**04.11.2022**
(c-5201)

# பொதியில் வந்த போதை மாத்திரைகள்

(கொழும்பு)

ஜேர்மனியில் இருந்து அனுப்பப்பட்ட சுமார் 5 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் ஒரு தொகுதி கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் மூலம் அனுப்பப்பட்ட பார்சல் ஒன்றினை பரிசோதித்த போது போதைப் பொருள் கையிருப்பு கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க மத்திய ஊடகப் பேச்சாளர், சுங்கப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

அட்டைப்பெட்டியில் 4,956 மாத்திரைகள் கவனமாக பொதி செய்யப்பட்டிருந்ததாகவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## தென்னைச் செய்கையாளர்களின் கவனத்திற்கு

1. யாழ்.பிரதேச தேங்காய்களை சில்வர்மில் நிறுவனத்தினர் மிகவும் கூடிய விலைக்கு கொள்வனவு.
2. நீங்கள் சில்வர் மில் நிறுவனத்தினருடன் ஏன் இணைய வேண்டும்?
3. நூறு வருட கால தேங்காய் ஏற்றுமதி வியாபாரத்தில் முன்னணியில் திகழும் சில்வர் மில் நிறுவனம்.
4. யாழ்.பிரதேச தேங்காய்களின் உற்பத்திக்கு தென்னைச் செய்கையாளர்களுக்கு ஏற்ற தேங்காய் விலை நிர்ணயம்.
5. கொடுப்பனவுகள் நம்பிக்கையுடன் நேரத்திற்கு கிடைக்கும்.
6. உங்கள் தென்னைச் செய்கையினை அபிவிருத்தி செய்ய சில்வர் மில் நிறுவனத்தினருடன் இணையுங்கள்.

(c-5206)

**தொடர்புகளுக்கு:-**
**1.திரு.A.கிருசாந் -070 635 2542**
**2.திரு.Y.ஜெனோசான் -077 495 5136**

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 50 சூரி 6 செவ் 12 இல்
உயரம்: 5' 3".
தகைமை/தொழில்: ஓட்டோ எலக்ரீசன்(CTB)
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/10224

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: சூரி 9 செவ் 5 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில் BBA பட்டதாரி (கணக்காளர்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியர்.வங்கி உத்தியோகத்தர்
தொ.இ: B/10227

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: சூரி 9 செவ் 7 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்: O/L (பூசகர்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் சைவபோசனம்
தொ.இ: B/10234

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம் : திருவாதிரை 2
கி.பா: சூரி.செவ் 3 இல்
உயரம் : 5'9"
தகைமை/தொழில்: O/L (பூசகர்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் சைவபோசனம்
தொ.இ: B/10235

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா:19 ½ சூரி 2 செவ் 1 இல்
உயரம்:5' 3"
தகைமை/தொழில்:B.Sc. Information Technology
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/10977

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:அஸ்வினி 4
கி.பா:51 சூரி 7 செவ் 3 இல்
உயரம்:5' 1"
தகைமை/தொழில்:ஆசிரியர்
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ:G/10978

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 38 சூரி 5 செவ் 4 இல்
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: Diploma in Law
எதிர்பார்ப்பு:அரச.தனியார் உத்தியோகம்
தொ.இ:G/10984

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: சூரி 12 செவ் 1 இல்
உயரம்: 158 cm
தகைமை/தொழில்: BA அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: G/10990

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

~ அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வளி மாசடைவினால் வருடாந்தம் 40 இலட்சம் பேர் உயிரிழப்பு

## நுளம்புச்சுருள் மிகவும் ஆபத்தானது என்கிறார் மொரட்டுவ பல்கலை விரிவுரையாளர்

(கொழும்பு)

**உள்ளக வளி மாசடைவினால் உலகம் முழுவதும் வருடாந்தம் 40 இலட்சத்துக்கு அதிகமானோர் உயிரிழக்கின்றனர் என மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் துசித சுகதபால தெரிவித்தார்.**

கண்டியில் நேற்று முன்தினம் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் நடத்தப்பட்ட செயலமர்வொன்றில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலித்தீன் எரித்தல், வீட்டுக்குள் ஊதுபத்திகளை ஏற்றுதல், நுளம்புச் சுருள்களை பற்றவைத்தல் போன்ற செயற்பாடுகள் வீட்டின் உட்புறத்திலும் வெளியிலும் வளி மாசினை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக 100 சிகரெட்களை பற்றவைப்பதன் மூலம் வெளிவரும் புகையில் உள்ள நச்சுத்தன்மையை விட ஒரு நுளம்பு சுருளில் இருந்து வெளிவரும் புகையின் நச்சுப் பொருளின் அளவு அதிகம் என சிரேஷ்ட விரிவுரையாளர் மேலும் தெரிவித்தார். (நி)

# சீன போர்க்கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புவதை இலங்கை நிறுத்த வேண்டும்-இந்தியா வலியுறுத்து

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து சீனாவின் போர்க்கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்ப இலங்கை அனுமதித்தமைக்கு இந்தியா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக பல ஆதாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகமானது சீன போர்க்கப்பல்களுக்கு இந்தியா அல்லது அமெரிக்க தலையீடு இல்லாமல் எரிபொருள் நிரப்புவதற்கு சரியான தீர்வை வழங்குகிறது என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை கவனத்தில் கொள்ளுமாறு இந்திய அதிகாரிகள் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்காணிப்பைத் தவிர்ப்பதற்காக சீன போர்க்கப்பல்கள் துறைமுகத்தைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று இந்தியாவுடன் அமெரிக்காவும் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்த சீனாவின் உதவி தேவைப்படுவதால், இலங்கை ஓர் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளமையும் இதற்கு காரணமாக அமைந்ததாக அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# எதிர்வரும் 8 ஆம் திகதி பூரண சந்திர கிரகணம்

(கொழும்பு)

எதிர்வரும் 8 ஆம் திகதி பூரண சந்திர கிரகணம் ஏற்படவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதி சந்திர கிரகணம் ஆசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளுக்கு முழு சந்திர கிரகணமாக தோன்றும் என்று பேராசிரியர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு அடிவானத்தில் இருந்து மாலை 5.48 மணிக்கு சந்திரன் உதயமாகவுள்ள நிலையில், அதன் இறுதிப் பகுதி மாத்திரம் இலங்கை மக்களுக்கு பகுதி சந்திர கிரகணமாக தென்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 6.19 மணிக்கு சந்திரகிரகணம் நிறைவடையும் எனவும் முழு சந்திர கிரகணம் 2025ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் திகதி மீண்டும் உலகுக்குத் தெரியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அரசியலில் இருந்து ஓய்வுபெற தயாராகும் மகிந்த?

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தயாராகி வருவதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி தொடர்பில் கலந்துரையாடி வருவதாகவும் தெரிவிக்கப்புட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், இந்தத் தீர்மானத்திற்கு பொதுஜன பெரமுன பல்வேறு கட்சிகளின் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (நி)

# சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள நகைக் கடையில் சங்கிலி திருடியவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள நகைக்கடை ஒன்றில் சங்கிலியை திருடிக் கொண்டு தப்பித்துச் சென்ற நபர் சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை காரணமாக ஒரு மணி நேரத்திற்குள் பேருந்து ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று வியாழக்கிழமை மதியம் சாவகச்சேரி நகர் பகுதியில் அமைந்துள்ள நகைக் கடைக்கு இளைஞன் ஒருவர் நகை கொள்வனவு செய்வது போன்று பாசாங்கு செய்து சென்றுள்ளார்.

அதன்போது நகைக் கடையில் காட்சிப்படுத்தப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒன்றரைப் பவுண் சங்கிலியை திருடிக் கொண்டு கடையை விட்டு தப்பித்துள்ளார்.

இது தொடர்பாக நகைக் கடை உரிமையாளர் உடனடியாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதுடன்கடையில் நின்ற உதவியாளரை திருடனை பின்தொடருமாறு அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையில் வவுனியா பஸ்ஸில் ஏறி திருடன் தப்பித்துச் சென்ற வேளையில் பேருந்தினை மறித்து பொலிஸார் திருடனை கைது செய்துள்ளனர்.

கைதான நபரை இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7.30)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்கார முடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்."

*-கிரேக்கப் பழமொழி-*

# கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துங்கள்

விவசாயம் என்றவுடன் கால்நடை வளர்ப்பு அதனுடன் இணைந்து விடுகிறது.

நம் முன்னைய விவசாயிகள் கால்நடை வளர்ப்பையும் விவசாயத்தையும் இணை முயற்சியாக மேற்கொண்டிருந்தனர்.

கால்நடைத் தீவனம் தோட்டத்திலிருந்து கிடைக்க, கால்நடை தரும் பசளைகள் விவசாயத்துக்கான இயற்கை உரமாயிற்று.

இதற்கு மேலாக உழவுத் தொழிலிலும் பொருட்களை ஏற்றி இறக்குவதிலும் எருதுகள் பயன்படுத்தப்பட்டன.

ஆனால் இன்று நிலைமை அதுவன்று. உழவுஇயந்திரப் பயன்பாடு அறிமுகமான போது, அசேதனப் பசளைப் பயன்பாடும் ஆக்கிரமித்துக் கொண்டது.

எனினும் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி எங்கள் மரபார்ந்த விவசாய முயற்சிகளைக் கைவிட்டமை மிகப்பெரும் தவறு என்பதைச் சுட்டி நிற்கிறது.

இந்த நிலையில், மீண்டும் கால்நடை வளர்ப்புப் பற்றிய சிந்தனை மேலெழ வேண்டும்.

தற்போதைய நிலையில் பசு வளர்ப்பு முயற்சியில் ஒரு பகுதியினர் ஈடுபட்டிருந்தாலும் அந்த முயற்சிக்கேற்ற பயன் கிடைக்கவில்லை என்பதை உணர முடிகின்றது.

உண்மை. நல்லினப் பசு வளர்ப்பில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் கால்நடைத் தீவனத்தின் அதீத விலை காரணமாக, பசு வளர்ப்பு முயற்சியைக் கைவிட்டு வருகின்றனர்.

தவிர, பசுக்களை வளர்ப்பவர்கள் அதற்குத் தேவையான தீவனங்களை கொடுக்காத காரணத்தால் பசுக்கள் மெலிந்து எலும்பும் தோலுமாகக் காட்சியளிப்பது மனதுக்கு வேதனை தருவதாகும்.

உண்மையில் நல்லினப் பசுக்களின் வளர்ப்பு என்பது உரிய நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாத பட்சத்தில் குறித்த பசுக்கள் தருகின்ற பயன் மிகக் குறைவு என்றாகிவிடுகிறது.

இந்நிலைமை நீடிக்கும்போது பசு வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் அதிலிருந்து விலக்குப் பெறவே விரும்புவர்.

ஆக, பசு வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு வேண்டிய மேய்ச்சல் தரவைகளை ஒதுக்கீடு செய்வது மற்றும் கால்நடைத் தீவனமாக அறிமுகப்படுத்தப்பட்ட புல்லினங்களை வளர்ப்பதற்கான இடங்களை ஒதுக்குதல், தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் எனப் பல்வகை ஊக்குவிப்புக்களை அரச தரப்புச் செய்ய வேண்டும்.

அப்போதுதான் பசு வளர்ப்பு முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றவர்களை அதில் தொடர்ந்தும் ஈடுபடுத்த முடியும் என்பதுடன் கால்நடை வளர்ப்பு முயற்சியில் புதியவர்களும் இணைந்து கொள்வர்.


இல்லையேல் பசு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பு முயற்சிகள் அடியோடு கைவிடப்படும் பேராபத்து நம் மத்தியில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களிற்கான தண்டனை இன்மையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சர்வதேச தினமான நேற்று யாழில் "ஊடகவியலாளர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள்" என்ற தலைப்பில் யாழ்.ஊடக அமையத்தினால் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. (படம்- கஜிந்தன்)

# பளை பொலிஸ் பிரிவில் வாள், துப்பாக்கி மீட்பு



(முறிகண்டி)

பளை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட முகாவில் பகுதியில் ஒருவரின் வீட்டில் வாள் மற்றும் இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து கடந்த முதலாம் திகதி மாலை குறித்த சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போதே குறித்த துப்பாக்கி மற்றும் வாள் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேகநபர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதாக பளை பொலிஸார் தெரிவித்தனர். (4-100)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (படம்-கஜிந்தன்)

# கலை விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் முன்பள்ளித் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)



மன்னார் சென்சேவியர் பாடசாலையில் கணித பிரிவில் தோற்றி மாவட்ட மட்டத்தில் 8 ஆவது இடத்தினை பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவான பற்றிக் ஆனந்தகுமார் மெற்றில் பியூலா என்ற மாணவிக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தால் மடிக்கணனி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (படம்-கஜிந்தன்)

# வீதிகளில் கட்டாக்காலிகள் போக்குவரத்திற்கு இடையூறு



(நெளுக்குளம்)

வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி மாடுகளால் மக்கள் போக்குவரத்து மேற்கொள்வதில் பெரும் சிரமத்தினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மழை ஆரம்பித்துள்ள நிலையில் நெளுக்குளம், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், குளுமாட்டுச்சந்தி, பூந்தோட்டம் மற்றும் வவுனியா நகர் போன்ற பல்வேறு பகுதிகளில் இரவு மற்றும் காலை வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் நடு வீதிகளில் படுத்துறங்குவதனால் போக்குவரத்து செய்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக விபத்துகள் ஏற்பட்டு கடந்த காலங்களில் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

எனவே கட்டாக்காலி மாடுகளை பிடித்து போக்குவரத்துக்களை இடையூறுகள் இன்றி மேற்கொள்வதற்கு உதவி செய்யுமாறு பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (4-299)

# குப்பை வீசினால் தண்டம்

## யாழ்.மாநகர சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொது இடங்களிலும் தெரு வீதிகளிலும் குப்பை போடுதல், உணவகங்களிலிருந்து கழிவு நீரினை பொது வடிகாலினுள் செலுத்தல், குடியிருப்பாளர்கள் தங்கள் தங்களது குடியிருப்புக்களுக்கு முன்னுள்ள வீதியோரத்தினை தூய்மையாக வைத்திருக்காமை மற்றும் போக்கு வரத்திற்கு இடையூறாக பொருட்களை வீதியோரங்களில் வைத்தல் உட்பட சில செயற்பாடுகளுக்கு யாழ். மாநகர சபை தீர்மானத்தின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது.

அதன்படி பொது இடங்களில் கழிவுகளை இடுதல் 5000 ரூபாய், உணவகங்களிலிருந்து கழிவு நீரினை பொது வடிகாலினுள் செலுத்தல் 5000 ரூபாய், வெற்றிலை போட்டு துப்புதல் 2000 ரூபாய், பொது இடங்களில் மலசலம் கழித்தல் 5000 ரூபாய், குடியிருப்பாளர்கள் வீதியோரத்தினை தூய்மையாக வைத்திருக்காமை 3000 ரூபாய், தூய்மைப்படுத்தாத காணிகளினை மாநகர சபை முறையாக அறிவித்தலின்படி கையகப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களை சமர்ப்பிப்போருக்கு வெகுமதியாக குறித்த நபரிடம் அறவிடப்படும் தண்டப்பணத்தின் 10 வீதம் வழங்கப்படும் எனவும் யாழ்.மாநகர முதல்வர் வி மணிவண்ணன் அறிவித்துள்ளார். (4)

யாழ்ப்பாணம், மட்டுவிலில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் கட்டுமான வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். (படம்-கஜிந்தன்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 280 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 230 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 200 |
| தக்காளி | 400 | 350 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 150 | 200 |
| கோவா | 350 | 300 | 300 | 350 |
| கரட் | 300 | 350 | 400 | 400 |
| பூசணி | 180 | 200 | 150 | 200 |
| புடோல் | 250 | 250 | 180 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 500 | 600 |
| பெரிய வெங்காயம் | 260 | 260 | 260 | 300 |
| பாகற்காய் | 450 | 700 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 140 | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 280 | 300 |
| பீற்றூட் | 350 | 250 | 280 | 300 |
| கறிமிளகாய் | 450 | 650 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 400 | 380 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | --- | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 150 |
| தேசிக்காய் | 500 | 500 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 260 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 500 | 400 | 320 | -- |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | - | 60 | 50 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகரெட் விலை...

வித்துள்ளது.

ஒற்றையாக அல்லது சில்லறையாக, சிகரெட் விற்பனை செய்யப்படுவதனை நிறுத்த வேண்டும் எனவும், ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைக்கும் நோக்கிலேயே, இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## எரிபொருள்...

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருளை முன்பதிவு செய்யாததன் காரணமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் வரிசைகள் காணப்படுவதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் விலை குறைக்கப்படும் என எதிர்பார்த்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருளை பெற்றுக் கொள்ளவில்லை எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் எரிபொருள் விலையை குறைப்பது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

### தன நிதானய

திகதி - 2022.11.03
சீட்டிழுப்பு இலக்கம் - 958
B 09 17 23 80

### மஹஜன சம்பத

திகதி 2022/11/03
சீட்டிழுப்பு இலக்கம் 4928
U 7 4 6 8 7 5

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.03
சீட்டிழுப்பு இலக்கம் 237
சிம்மம் 05 39 56 57 சிம்மம்

### மெகா பவர்

திகதி 03/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1276
X 25 02 15 73 80

### கொவிசெத

திகதி 2022.11.03
சீட்டிழுப்பு இலக்கம் 3170
M 05 13 37 44

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 03/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1383
துலாம் 1 2 7 1 0 0

## அரசின் வரி...

பாராளுமன்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடி நிலவும் நிலையில் அரசாங்கம் புதிய வரி விதிப்பு தொடர்பில் அறிவிப்பை விடுத்துள்ளது.

புதிய வரி விதிப்பால் மக்கள் இடர்களை எதிர்நோக்குகிறார்கள் என தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நீதிபதிகள் தமக்கும் குறித்த வரி விதிப்பால் பாதிப்பு ஏற்படுமோ என நினைத்து நீதியரசர்களிடம் இது சரியா எனக் கேட்கிறார்கள்.

நீதியரசர்கள் குறித்த வழக்குத் தொடர்பில் விசாரித்து தீர்ப்பு வழங்க உள்ள நிலையில் தீர்ப்புத் தொடர்பில் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் மக்களின் உள்ளூர் செலவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக வரி விதிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

மக்கள் இக்கட்டான சூழ்நிலையை உணர்ந்து செலவுகளை எவ்வாறு குறைக்கலாம் எனச் சிந்தித்து செயற்பட வேண்டும்.

ஆகவே தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு அரசியலில் ஒற்றுமையும் சமூகத்தில் பகிர்ந்து கொள்ளுதலும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,104)

## விலையைக்...

ஒன்றின் விலை 105 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 585 ரூபாயாகும்.

சதொச ஊடாக ஒரு கிலோ நெத்தலியை 1300 ரூபாயுக்கு கொள்வனவு செய்ய முடியும். அவற்றின் விலை கிலோவொன்றுக்கு 200 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே 17 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள சிவப்புப் பருப்பு கிலோ ஒன்றினை 398 ரூபாயுக்கு கொள்வனவு செய்யமுடியும் என லங்கா சதொச தெரிவித்துள்ளது. (ம-7)

## இம்ரான் கான்...

எப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இம்ரான் கான் காயமடைந்துள்ளார்.

பேரணியில் இம்ரான் கான் திறந்த வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் முற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது இம்ரான் கானின் காலில் காயம் ஏற்பட்டதுடன் அவரது கட்சியான பிடிஐயைச் சேர்ந்த சிலரும் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து இம்ரான் கான் பாதுகாப்பாக குண்டு துளைக்காத வாகனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டதனையடுத்து அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## டெங்குக் காய்ச்...

இவருக்கு கடந்த திங்கட்கிழமை மாலை காய்ச்சல் ஏற்பட்டுள்ள நிலையில் மறுநாள் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் நேற்று முன்தினம் புதன்கிழமை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை காலை உயிரிழந்தார்.

மரணவிசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். பிரேத பரிசோதனை அறிக்கையில் டெங்குக் காய்ச்சலால் இறந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## யாழில்...

யாழ்.நகரில் மீற்றர் வட்டிக்கு பணத்தினை பெற்று அழகுசாதன விற்பனை நிலையத்தினை நடத்தி வந்துள்ளார்.

மீற்றர் வட்டிக்கு எடுத்த பணத்தை செலுத்துவதற்கு மீண்டும் மீற்றர் வட்டிக்கு பணம் எடுத்ததன் காரணமாக வட்டிக்கு மேல் வட்டி ஏற்பட்டது.

இதனால் மனமுடைந்திருந்த அவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

## பயங்கரவாத...

தைத் தணித்து, நாட்டை நிலையான வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு இட்டுச் செல்லும் தேவையான சீர்திருத்தங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான வழக்கமான இருதரப்பு தொடர்புகளின் பின்னணியில், கொழும்பில் கடந்த ஒக்ரோபர் 28ஆம் திகதி நடைபெற்ற ஆளுகை, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஆறாவது செயற்குழுவின் கூட்டத்தின்போது இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1903 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.11.03 | தினம் வியாழக்கிழமை
X 08 18 43 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,491,780/-

### சனிதா (Shanida)

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.03
சீட்டிழுப்பு இல : 4064
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,365,320/-
வெற்றி இலக்கங்கள் 15 21 27 61
ஆங்கில எழுத்து H

### ராசி (அதிர்ஷ்ட)

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,155,972.80
திகதி 2022-11-03
வெற்றி வாரம் 3615
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 12 28 40 42
கும்பம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,267,780/-

### லக்னா / 27 வசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 29 17 32 34 42
சீட்டிழுப்பு வாரம் 1079
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.11.03 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 274,466,225.80
தொலைபேசி 011-2 333 546-47
Web: www.dlb.lk

### සංවර්ධන වාසනාව

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 541 | திகதி 2022-11-03 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் 50 55 64 | விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13,880,976/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1729
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.11.03
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,685,140/-
வெற்றி இலக்கங்கள் 34 41 42 77
ஆங்கில எழுத்து J

நாகபூசணி அம்மன் அருளுடன்

01.11.2022 செவ்வாய்க்கிழமை சீட்டிழுக்கப்பட்ட **மகஜன சம்பத** ரிக்கெற் ஊடாக **20 இலட்சம்** ரூபாயும் **சசிரி** ரிக்கெற் ஊடாக **1 இலட்சம்** ரூபாயும் எமது முகவரூடாக வெல்லப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.யாழ். மாவட்டத்தில் அதிர்ஷ்டத்தின் முன்னணி முகவராகத் திகழும்

**கனகலிங்கம் திலகவதி முகவர்.**

'உங்களுக்காக என்றும் நாம் பணியாற்றுவதில் மகிழ்ச்சியே'



(C-5210)

077 603 1723

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2023 ஆம்...

கான டிசம்பர் மாத எதிர்பார்ப்பை இலங்கை இழக்கும் என்று இந்திய செய்தித்தாளான தெ ஹிந்துஸ் தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

முக்கிய இருதரப்பு கடனாளியான சீனா 20ஆவது கட்சிமாநாட்டில் ஈடுபட்டமை காரணமாக இலங்கையுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களை நடத்துவதில் காலதாமதம் ஏற்பட்டமையும் இதற்கான காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே இலங்கை பெரும் அரசியல் கொந்தளிப்பை நோக்கிச் செல்கிறது என்றும் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

வோஷிங்டனை தளமாகக் கொண்ட நிதி ஆய்வாளர்களின் கூற்றுப்படி, எதிர்வரும் டிசம்பரில் எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியை இலங்கை இழக்கக்கூடும்

இதன் காரணமாக அந்த நிதியத்தின் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை எட்டு சம தவணைகளாக பெறுவதற்கு 2023 மார்ச் வரை காத்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டிற்கு தேவையான மருந்துகளை

# இந்திய விநியோகஸ்தர்களிடம் கொள்வனவு செய்ய தீர்மானம்

(கொழும்பு)

நாட்டிற்கு தேவையான மருந்துகளை இந்திய மருந்து விநியோகஸ்தர்களிடம் இருந்து நேரடியாக கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முன்பதிவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 150 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், முன்பதிவு செய்யப்பட்ட மருந்துகள் எதிர்வரும் 14 நாட்களில் நாட்டிற்கு கொண்டுவரப்படும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடன் வசதியின் கீழ் மருந்துகள் உட்பட சுமார் 1,700 பொருட்கள் பெறப்படவுள்ளதாகவும் பொருட்கள் மற்றும் மருந்துகளை கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, காலாவதியான Pfizer தடுப்பூசிகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## பொருளாதார நெருக்கடியால்

# பெண்கள், குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்

## பொருளாதார சமூக ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெண்களும் குழந்தைகளும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய அலுவலகத்தின் தலைவர் மிக்கிகோ தனகா, கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவுடன் கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் சிறிய அளவிலான பெண் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் குடும்ப சூழலில் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களை வலுப்படுத்த நல்ல சந்தர்ப்பம் காணப்படுவதாக தெரிவித்தார்.

இதன்போது ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய நுண் மற்றும் சிறிய அளவிலான பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக கைத்தொழில் அமைச்சு பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக ரமேஷ் பத்திரன சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


உ

ஓம் சக்திமயம்

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை

**அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்**

**அறிவித்தல்**

மேற்படி ஆலயத்தின் தற்கால சூழல் என்ற கருப்பொருள் தொடர்பான ஓர் கலந்துரையாடல் நடாத்த வேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டுள்ளது. எனவே ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள், மஹோற்சவ உபயகாரர்கள், அலங்கார உற்சவ உபயகாரர்கள், ஏனைய விழா உபயகாரர்கள், சமூகப் பெரியார்கள், அம்பாளின் அடியார்கள், சமய, ஆன்மீக வல்லுனர்கள் போன்றோரை எதிர்வரும் 06.11.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி ஆலய வளாகத்தில் ஒன்றிணைந்து தங்களின் ஆக்கபூர்வமானதும் மேலானதுமான கருத்துக்களை வழங்குமாறு அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

தெளிவே என் சிந்தனை

இங்ஙனம்
இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதமகுருவும் ஆதீன கர்த்தாவும்
மேற்படி தேவஸ்தானம்.

(C-5203)



அமெரிக்க லொத்தர் இலவச விசா
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
Passport அவசியமில்லை
55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இன்னும் மூன்று நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்
இதுவரை மெக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் (C-5159)
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்
எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours எனது Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.
V2 Travels 0768226240 0768226244



**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
11 - 11 - 1963

மறைவு
16 - 10 - 2021

காரைநகர் அல்லின் வீதியைப் பிறப்பிடமாகவும்
தச்சந்தோப்பு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

**கனகரத்தினம் பத்மநாதன்**

ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததையா
உம்மை இழந்து நாம் தவிப்பது
உமக்குத் தெரியவில்லையா?
அன்பை மட்டும் எமக்குத்தந்து
துன்பம் சுமந்தீர்களே!
இனி எங்கு காண்போம்
உம் அன்பு முகத்தை?

(13331)

உங்கள் நினைவுகளுடன்
மனைவி ராசலட்சுமி (ராணி), பிள்ளைகள்,
மருமகன், மருமகள், பேர்த்தி, மாமி, மாமா,
மச்சான், மச்சாள், அக்காக்கள், [illegible]



**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு

**076 702 3565**

(13341)



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

(13342)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org